# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-காஞ்சிபுரம் மாவட்டம்

(29.03.2017 முதல் 02.04.2017 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (24.03.2017 முதல் 27.03.2017)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக வானம் ஓரளவு தெளிவாக காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 34.0°C மற்றும் 22.0-23.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 80 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 7-15 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 29.03.2017 | 30.03.2017 | 31.03.2017 | 01.04.2017 | 02.04.2017 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 5 | 5 | 5 | 5 | 6 |
| காற்று வரும் திசை | தென் மேற்கு | தெற்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தெற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 35 | 35 | 35 | 35 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 24 | 24 | 24 | 24 | 25 |
| ஈரப்பதம் | 63-75 | 63-75 | 63-75 | 63-75 | 63-75 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதான் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
2. உழவர்கள் தங்களுடைய கோழிப் பண்ணைகளில் வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் திவனம் அளிக்காமால் குளிர்ந்த குடிநீர் அளிப்பதன் மூலம் வெப்பத்தக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.
3. தற்போது ஆடுகளுக்கு தேவையான அளவு புற்கள் இல்லாத காரணத்தினால் உழவர்கள் தினமும் 100 முதல் 200 கிராம் அளவு அடர் தீவனம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
5. பியுடாக்ஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணிரில் 2-3 மில்லி என்ற அளவில் கலந்து ஆடுகளின் மேல் புறம் தடுவுவதன் மூலம் புறஒட்டுண்ணிகளை நீக்கலாம்.
6. உழவர்கள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுகளின் பொருக்கத்தை தடுக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெல் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2% DAP கரைசலை (ஏக்கருக்கு 4 1/2 கிலோ 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்த நாள் தெளிந்த நீரை வடிகட்டி 190 லிட்டர் தண்ணீருடன் கலக்கவும்) பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நான்கு நனையும்படி தெளிக்கவும் .
2. நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிரில் மேல் சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் அல்லது ஏக்கருக்கு 400 கி மேன்கோசப் அல்லது 1 கிலோ நனையும் கந்தகத் தூளை காலை அல்லது மாலை வேலையில் தெளிக்கவும்.